**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.241/2022**
**வழக்கு சாட்சி DW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.T.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கிருஷ்ணசாமி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : பருத்தியூர் | வயது | : சுமார் 55 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 06.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**(இ.ம.எண்.2/2026 மனுவானது அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வழங்கும் முதன்மை சாட்சியம்)**

**கூடுதல் முதல் விசாரணை :**

எனது தகப்பனார் சொத்துக்களை பொறுத்து ஏதாவது ஆவணங்கள் ஏற்படுத்தி வைத்துள்ளாரா என்றால் ? ஆமாம். என்ன ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால்? உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். யார் யார் பெயருக்கு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் ? எனது பெயருக்கும், 1ம் பிரதிவாதி நல்லம்மை பெயருக்கும் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். எனக்கு எந்த தேதியில் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் ? 12.06.2017ம் தேதி எழுதிவைத்துள்ளார். எந்த சொத்துக்களை பொறுத்து உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் ? நஞ்சை நிலத்தை பொறுத்து எழுதி வைத்துள்ளார். நல்லம்மைக்கு எப்போது உயில் எழுதி வைத்தார் என்றால் ? 12.06.2017ம் தேதியில் அதே ஆண்டில் தான் எழுதி வைத்துள்ளார். எனது பெயருக்கு எனது தகப்பனார் கடந்த 12.06.2017ம் தேதி எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் பி.வா.சா.ஆ.1 ஆகும். எனது சகோதரி நல்லம்மை பெயருக்கு எனது தகப்பனார் கடந்த 12.06.2017ம் தேதி எழுதி வைத்த பதிவு

செய்யப்பட்ட உயில் சாசனம் பி.வா.சா.ஆ.2 ஆகும். (மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணமானது எனது சகோதரியின் பெயரில் உள்ளதாலும், நான் பி.வா.சா.ஆ.2 உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்கள் மற்றும் ஆவணத்தின் உரிமையாளர் அல்ல என்பதால் மேற்படி பி.வா.சா.ஆ2 ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை தீர்ப்பின் போது பரிசீலிக்கப்படும்)

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :**

பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் எனது தகப்பனார் நல்ல மனநிலையில், சுய விருப்பத்தின் அடிப்படையில் எழுதி வைக்கப்பட்டவை அல்ல என்றாலும், எனது தகப்பனார் வயோதிகம் அடைந்து நோய்வாய்ப்பட்ட சமயத்தில் எனது ஆதரவில்இருந்து வந்ததால் நான் எனது தகப்பனாரை என்ன ஆவணம் எழுதி வைக்கிறேன் என்று தெரியாமலும், எந்த அலுவலகத்திற்கு அழைத்து போகிறேன் என்று தெரியாமலும், நானும், எனக்கு வேண்டியவர்களும் சேர்ந்து மேற்படி உயில் ஆவணங்களை தயாரித்துக் கொண்டோம் என்றால் ? சரியல்ல.

Takendown by me in opencourt and
Readover by me and acknowledged
by him/her to be correct.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.06 17:19:48 +0530

Sub Judge,
Oddanchatram